
தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**03.12.2012 P.M**

**04.12.2012 A.M**

## காற்றழுத்தத் தாழ்வு நீடிப்பு : வட கடலோர மாவட்டங்களில் கனமழை தொடரும்




வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி சற்று வலுவிழந்து தென் ஆந்திரம் மற்றும் தமிழக கடலோரப் பகுதியில் நிலை கொண்டுள்ளது.

இதன் காரணமாக வட கடலோர மாவட்டங்களில் திங்கள்கிழமை இரவு பலத்த மழை பெய்தது. செவ்வாய்க்கிழமையும் (டிசம்பர் 4) கனமழை தொடரும் வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் கனமழையோ அல்லது மிக கன மழையோ பெய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சில நாள்களுக்கு முன்பு வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி தமிழகத்தை நோக்கி நகர்ந்து வந்துள்ளது. திங்கள்கிழமை அது காற்றழுத்தத் தாழ்வு நிலையாக வலுவிழந்தது. இருப்பினும் தமிழக கடலோரப் பகுதியில் நிலை கொண்டிருப்பதால் அடுத்த சில நாள்களுக்கு தமிழகத்தில் பரவலாக மழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பருவமழை போதிய அளவு பெய்யாததால் மாநிலத்தின் முக்கிய அணைகள் மற்றும் ஏரிகளின் நீர்மட்டம் குறைந்து

வருகிறது.  இதனால் காற்றழுத்தத் தாழ்வு நிலை அல்லது வெப்பசலனத்தின் காரணமாக பெய்யும் மழையை நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

இது குறித்து குடிநீர் வாரிய அதிகாரிகள் கூறுகையில், "சென்னையில் 4 நாள்களுக்காவது தொடர்மழை பெய்தால்தான் ஏரிகளின் நீர்மட்டம் உயரும். தொடர் கனமழை பெய்தால் மட்டுமே சென்னையில் சில மாதங்களுக்கு குடிநீர் விநியோகம் தடைபடாது' என்றனர்.

தமிழகத்தில் மழை வாய்ப்பு குறித்து வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் கூறியது:

காற்றழுத்தத் தாழ்வு நிலை தென் ஆந்திரம் மற்றும் தமிழக கடலோரத்தில் நிலை கொண்டிருப்பதால் கடலோர மாவட்டங்களில் மழை பெய்யும். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட வட கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. மாநிலத்தின் உள்மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடும். சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யலாம். கனமழை பெய்யவும் வாய்ப்புள்ளது என்றார்.

திங்கள்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

சென்னை - 50; காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரம் - 40; ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் - 30; எண்ணூர், விழுப்புரம் மாவட்டம் வானூர், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, செய்யாறு - 20.

## தில்லியில் இன்று கரும்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டம் : முன்னாள் ராணுவ தளபதி வி.கே. சிங் பங்கேற்கிறார்

தில்லி நாடாளுமன்ற சாலையில் செவ்வாய்க்கிழமை (டிசம்பர் 4) நடைபெறும் கரும்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் இந்திய ராணுவ முன்னாள் தலைமைத் தளபதி வி.கே. சிங் பங்கேற்பார் என்று ராஷ்டிரிய கிசான் மஸ்தூர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக, அச்சங்கத்தின் தலைவர் வி.எம். சிங் கூறியது:

சர்க்கரை துறைக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்த பரிந்துரைக்கும் ரங்கராஜன் குழு அறிக்கையால் உத்தரப் பிரதேசம், உத்தராகண்ட், பஞ்சாப், ஹரியாணா, பிகார், மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களின் கரும்பு விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுவர்.

ரங்கராஜன் குழுவின் அறிக்கை சர்க்கரை ஆலை அதிபர்களுக்கு ஆதரவாக உள்ளது. உற்பத்தியாகும் கரும்புக்கு உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் தவிக்கின்றனர். இந்த

நிலையில், சர்க்கரைத் துறையில் கட்டுப்பாடுகளை நீக்குவது பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தும். எனவே, ரங்கராஜன் குழு அறிக்கையை மத்திய அரசு நிராகரிக்க வேண்டும் என்று வி.எம். சிங் கூறினார்.

ராணுவப் பணியில் இருந்து வி.கே. சிங் ஓய்வு பெற்றதும் சமூக ஆர்வலர் அண்ணா ஹசாரே நடத்திய சில போராட்டங்களில் கலந்து கொண்டார். அதைத் தொடர்ந்து

ராஷ்டிரிய கிசான் மஸ்தூர் சங்கம் சில நாள்களுக்கு கூட்டியிருந்த நிருபர்கள் சந்திப்பிலும் அவர் கலந்து கொண்டார். இப்போது, அவர் அச்சங்கத்தினர் நடத்தும் தில்லி போராட்டத்திலும் பங்கேற்கவுள்ளார்.

ஹரியாணா மாநிலத்தைச் சேர்ந்த வி.கே. சிங்குக்கு ஏராளமான விவசாய அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

03rd dec 2012 P.M

**எலச்சிபாளையத்தில் நெல் விதைப்பண்ணை**

திருச்செங்கோடு வட்டம், எலச்சிபாளையத்தில் ஒரு ஏக்கர் பரப்பில் நெல் விதைப்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

ஏடிடி 45 ரகத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் பழனிவேல் நிலத்தில் இந்த விதைப்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. இதை, நாமக்கல் மாவட்ட விதைச் சான்று உதவி இயக்குநர் ஆர். சுப்பிரமணியம் சனிக்கிழமை ஆய்வு செய்தார். எலச்சிபாளையம் வேளாண் உதவி இயக்குநர் முரளிதரன் மற்றும் நாமக்கல் மாவட்ட வேளாண் உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) ஜெகதீசன் ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் நெல் விதை குறித்து சுப்பிரமணியம் கூறியது: நெல் பயிரில் கோனோவீடர் கருவியைப் பயன்படுத்தி நடவு செய்த 10, 20, 30 மற்றும் 40 நாள்களில் களை எடுக்கும்போது, பயிருக்கு நல்ல காற்றோட்டம் கிடைத்து தூர்கள் அதிகரிப்பதால் மகசூல் கூடுகிறது. களைகள் மண்ணோடு மக்கச் செய்வதால் பயிருக்கு தேவையான சத்து கிடைத்து உரச் செலவு குறைகிறது. மேலும், இலைச் சுருட்டுப் புழுவைக் கட்டுப்படுத்த தழைச் சத்தை பரிந்துரைக்கு மேல் இடுவதை தவிர்த்து, பயிருக்கு அளிக்கும் தழைச் சத்தினை மூன்று முறையாக பிரித்து இட வேண்டும்.

இலைச் சுருட்டுப் புழுவின் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு மேல் இருந்தால் ஏக்கருக்கு 5 சத வேப்பங்கொட்டை கரைசல் அல்லது மானோ குரோட்டோபாஸ் 400 மிலி அல்லது குளோரிபைபாஸ் 500 மிலி என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம் என்றார் அவர்.

உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களின் முக்கியத்துவம் குறித்து உதவி இயக்குநர் ஜெகதீசன் பேசினார். திருந்திய நெல் சாகுபடி முறை தொழில்நுட்பம் குறித்து வேளாண் உதவி

இயக்குநர் முரளிதரன் விளக்கினார். ஆயிவின் போது வேளாண அலுவலர் கோமதி, துணை வேளாண் அலுவலர் தர்மலிங்கம், உதவி வேளாண் அலுவலர்கள் செந்தில், குழந்தைவேல் ஆகியோர் உடனிருந்தனர். திரளான விவசாயிகளும் பங்கேற்றனர்.

**கொய்மலர்களை சர்வதேச அளவில் வர்த்தகம் செய்ய நடவடிக்கை**

கொடைக்கானலில் விளையும் கொய்மலர்களை சர்வதேச அளவில் வர்த்தகம் செய்ய தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் முயற்சி செய்து வருகின்றனர்.

கொடைக்கானலில் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம், 2006 முதல் செயல்படுத்தப்பட்டு, பசுமைக் குடில்கள் மூலம் கார்னேசன் போன்ற கொய்மலர்களை கொடைக்கானல் தாலுகாவில் சாகுபடி செய்வதற்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. காய்கறி சாகுபடிக்கு இணையாக விவசாயிகள் கொய்மலர்கள் சாகுபடியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த கொய்மலர்களை சர்வதேச அளவில் வர்த்தகம் செய்யும் நோக்கத்துடன், தேசிய தோட்டக்கலை இயக்க தொழில்நுட்பக் குழுவைச் சேர்ந்தவர்களும்,தோட்டக்கலை ஆராய்ச்சிநிலையத் தலைவர் ராஜாங்கம்,துணை இயக்குநர்கள் கந்தசாமி, ராஜாமுகமது, உதவி பொறியாளர் ஜான் ஆகியோர் மேல் பழனி மலைப் பகுதிகளான மன்னவனூர்,கவுஞ்சி, பூம்பாறை,கூக்கால் போன்ற பகுதிகளையும், கீழ் பழனிமலைப் பகுதிகளான தாண்டிக்குடி,பண்ணைக்காடு போன்றவற்றில் அமைக்கப்பட்டுள்ள காரனேசன் பசுமைக் குடில்களையும் பார்வையிட்டனர்.

இதுகுறித்து, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) ராஜாமுகமது கூறியது:

கொடைக்கானலில் சுமார் 1.30 லட்சம் சதுர மீட்டர் பரப்பளவில் பசுமைக் குடில்கள் உள்ளது. ஆயிரம் சதுர மீட்டர் பரப்பிலிருந்து, குறைந்தபட்சம் ஒரு லட்சம் கொய்மலர்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

(ஒரு கட்டு 20 பூக்கள் கொண்டது).

இவற்றின் விலை, பருவ காலத்திற்கேற்ப ரூ. 75 முதல் ரூ. 200 வரை விற்பனை செய்யப்படுகிறது.

சீசன் இல்லாத நேரங்களில் ரூ. 70 முதல் ரூ. 90 வரையிலும், கிறிஸ்துமஸ், புதுவருடம், காதலர்கள் தினம் போன்ற சீசன் காலங்களிலும் சாதாரணமாக ரூ. 180 முதல் ரூ. 200 வரையும் விற்பனை செய்யப்படுகிறது.

தற்சமயம் பெங்களூரு சந்தையில் ரூ. 180 ஆகவும், புதுதில்லி சந்தையில் ரூ. 200 வரை விற்பனை செய்யப்படுகிறது.

கொடைக்கானல் பகுதியிலிருந்து மட்டும் ஏறத்தாழ ரூ. 300 லட்சம் முதல் ரூ. 500 லட்சம் மதிப்பிலான மலர் வர்த்தகப் பரிவர்த்தனை நடைபெற்று வருகிறது.

வரும் காலங்களில் கொடைக்கானல் பகுதியில் புவிசார்ந்த தகவல்முறை (ஜி.ஐ.எஸ்.)

மென்பொருள் தொழில்நுட்பத்தின் மூலம் இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.
இந்த இணைய வலைதளத்தின் மூலம் சர்வதேச அளவில் கொடைக்கானல் கொய்மலர்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## தென்னை சாகுபடி செயல் விளக்க முகாம்

வத்தலகுண்டு அருகே ஜி. தும்மலப்பட்டியில், தென்னை சாகுபடி செயல் விளக்க முகாம் நடந்தது.
வேளாண்மை இயக்குநர் கோபால்ராஜ் தலைமை வகித்தார். காந்தி கிராம வேளாண்மை அறிவியம் நிலைய தொழில்நுட்ப வல்லுநர் உதயகுமார், தென்னை சாகுபடி தொழில்நுட்பங்களை விளக்கிப் பேசினார்.

## இறைச்சிக் கோழி விலை சரிவு

தேனி மாவட்டத்தில் பரவைக் காய்ச்சல் பீதி, சபரிமலை ஐய்யப்பன் மற்றும் பழனி முருகன் கோவில் சீசனை முன்னிட்டு இறைச்சிக் கோழி விலை சரிந்துள்ளது.
தேனியில் ஞாயிற்றுக்கிழமை உரித்த பிராய்லர் கோழி கிலோ ரூ.70-க்கு விற்கப்பட்டது. இறைச்சி விற்பனையை அதிகரிக்க, பல இடங்களில் கடைக்காரர்கள் ஒரு கிலோவுக்கு அரை கிலோ இலவசம், முட்டை, சிக்கன் மசாலா பாக்கெட்டுகள் இலவசம் என்று விளம்பரம் செய்து விற்னை செய்து வருகின்றனர்.
சபரிமலை ஐயப்பன் கோவில் சீசன் தொடங்கியதை முன்னிட்டு, மாவட்டத்தில் இருந்து கேரளத்துக்கு குறைந்த அளவு மட்டும் இறைச்சிக் கோழிக்கள் விற்னைக்கு அனுப்பப்படுகின்றன.
இறைச்சிக் கோழி விற்பனை சரிந்துள்ளதால் ராயப்பன்பட்டி, அரண்மனைப் புதூர், போடி, சின்னமனூர், பெரியகுளம், தேவதானப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கோழிப் பண்ணைகளில் மொத்த விற்பனை விலையும் குறைந்துள்ளது

## கடலோர மாவட்டங்களில் இன்று மழை பெய்யும்

வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி தென் வங்கக் கடலின் மத்திய பகுதியில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழக கடலோர மாவட்டங்களில் திங்கள்கிழமை (டிசம்பர் 3) மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்பு அந்தமான் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவானது. இது தமிழகத்தை நோக்கி நகர்ந்து வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமையன்று அந்த தாழ்வுப் பகுதி தென் வங்கக்கடலின் மத்திய பகுதியில் நிலை கொண்டுள்ளது.

அடுத்த 48 மணி நேரத்துக்குள் அது தீவிர காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக மாறக்கூடும் என வானிலை ஆய்வு மைய வட்டாரங்கள் தெரிவிக்கன்றன. இதனால் அடுத்த சில நாள்களுக்கு தமிழகத்தில் பரவலாக மழை பெய்யக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் வறண்ட வானிலை நிலவும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

03.12.2012 P.M

04.12.2012 A.M

**வேளாண்துறை தொழில்நுட்பத்தின் மூலம்அதிக மகசூல் பெறலாம்**

உளுந்தூர்பேட்டை:உளுந்தூர்பேட்டை வேளாண்துறை அலுவலகத்தில் விவசாயிகளுக்கு இடு பொருட்கள் வழங்கும் விழா நடந்தது.விழாவிற்கு குமரகுரு எம்.எல்.ஏ., தலைமை தாங்கி விவசாயிகளுக்கு இடு பொருட்களை வழங்கினார். வேளாண் இணை இயக்குநர் சேகர் முன்னிலை வகித்தார். வேளாண் உதவி இயக்குநர் கருணாநிதி வரவேற்றார்.
விழாவில் 9 ஹெக்டேர் கரும்பு பயிருக்கு நீரில் கரையும் உரம், இரு விவசாயிகளுக்கு பவர் விடர், மண் புழு உரம் தயாரித்தலுக்கு மானியம் உள்ளிட்ட விவசாய இடு பொருட்களை வழங்கி குமரகுரு எம்.எல்.ஏ., பேசியதாவது:மழை அதிகளவில் பெய்யவில்லை.

இருக்கின்ற தண்ணீரை பயன்படுத்தி விவசாயிகள் மகசூல் பெற்று வாழ்வாதாரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும். இதற்காக சொட்டு நீர் பாசன முறைகளை கையாள வேண்டும். அரசு திட்டங்களையும், மான்யங்களையும் விவசாயிகள் பயன்படுத்திட வேண்டும்.இதற்கு முன் கரும்பு சாகுபடியால் ஒரு ஏக்கருக்கு 30, 40 டன் மட்டுமே அறுவடை செய்யப்பட்டு வந்தது. தற்பொழுது வேளாண் துறை தொழில்நுட்பத்தின் மூலம் ஒரு ஏக்கரில் 106 டன் நவீன ரக கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. இம்முறையை கையாண்டு விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம்.இவ்வாறு குமரகுரு எம்.எல்.ஏ., பேசினார்.

**பருத்தி சாகுபடி பயிற்சி**

விருதுநகர்:விருதுநகர் எம். ரெட்டியபட்டியில் அட்மா திட்டத்தின் கீழ், பருத்தி சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி நடந்தது. மாவட்ட இசைவு அலுவலர் செண்பகராஜ், வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் ஜெகதீஸ்வரி, வேளாண் பேராசிரியர் ராதிகா பேசினர். ஏற்பாடை வேளாண் அலுவலர் சுந்தரவள்ளி செய்திருந்தார்.

**பார்த்தீனியம் ஒழிப்பு முகாம்**

தேனி:குப்பிநாயக்கன்பட்டி, அம்பாசமுத்திரம் ஊராட்சிகளில் விவசாய உதவி இயக்குனர் முத்துலட்சுமி தலைமையில், பார்த்தீனியம் ஒழிப்பு முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர்கள்

நேருதாஸ், மோகன்ராஜ், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆண்டாள், விவசாய அலுவலர் அஜ்மல்கான் உட்பட பலர் பங்கேற்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

03.12.2012 P.M

04.12.2012 A.M

**போட்டி அதிகரித்ததால் காபி ஏற்றுமதி 8% குறைந்தது**



புதுடெல்லி : இந்த ஆண்டில் நவம்பர் வரையிலான காலத்தில், காபி ஏற்றுமதி 8 சதவீதம் குறைந்து 2.97 லட்சம் டன்னாக உள்ளது. இதுகுறித்து காபி போர்டின் உயரதிகாரி ஒருவர் கூறியதாவது: கடந்த ஆண்டில் நவம்பர் வரையிலான காலத்தில் 3.23 லட்சம் டன் காபி ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால், இந்த நிதியாண்டில் அதே காலத்தில் காபி ஏற்றுமதி 8 சதவீதம் குறைந்து 2.97 லட்சம் டன்னாக உள்ளது. இதற்கு காரணம், சர்வதேச அளவில் போட்டி அதிகரித்து விலையில் மந்தநிலை ஏற்பட்டுள்ளதுதான்.

பொதுவாக காபி விற்பனை நன்றாக உள்ளது. இந்த ஆண்டில் ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலத்தில், ரோபஸ்டா மற்றும் அராபிகா ரகங்கள் முறையே 1.53 லட்சம் டன்களும், 56,018 டன்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இன்ஸ்டன்ட் காபி தூள் ஏற்றுமதி கடந்த ஆண்டை விட(43,351 டன்) அதிகரித்து 44,461 டன்னாக உள்ளது. காபி ஏற்றுமதி செய்யப்படும் நாடுகளில் இத்தாலி முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்தபடியாக ரஷ்ய கூட்டமைப்பு, ஜெர்மனி, பெல்ஜியம், சுலோவேனியா ஆகியவை உள்ளன.

கடந்த ஆண்டில் 3.14 லட்சம் டன் காபி கொட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்த ஆண்டில்

இது 3.25 லட்சம் டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அந்த அதிகாரி கூறினார்.

## தோவாளை சந்தையில் மல்லிகை கிலோ ரூ.800



ஆரல்வாய்மொழி : தோவாளை பூ மார்க்கெட்டில் நேற்று மல்லிகை கிலோ ரூ.800க்கு விற்பனையானது. குமரி மாவட்டத்தில் பிரபலமான தோவாளை பூ மார்க்கெட்டில் சில நாட்களாக மல்லிகை பூ வரத்து குறைந்துள்ளது. பனிப்பொழிவு காரணமாக பூ உற்பத்தி குறைந்து விட்டதாக வியாபாரிகள் கூறினர். இதனால் மல்லிகை விலை அதிகரித்தது.

இந்நிலையில், கோட்டாறு சவேரியார்கோயில் திருவிழா மற்றும் ஐயப்ப சீசன் காரணமாக மல்லிகை விலை மேலும் அதிகரித்தது. ஒரு கிலோ மல்லிகை ரூ.1,200க்கு விற்பனையானது. நேற்று பூக்கள் விலையில் சரிவு காணப்பட்டது. ஒரு கிலோ மல்லிகை ரூ.800க்கு விற்கப்பட்டது. அதுபோல ரூ.700க்கு விற்ற பிச்சிப்பூ நேற்று ரூ.450 ஆக குறைந்தது. அரளி, கிரேந்தி, சம்பங்கி, வாடாமல்லி, ரோஸ், கனகாம்பரம், முல்லை பூக்களின் விலையும் குறைந்திருந்தது.

## இந்தியாவின் வளர்ச்சி 5.4 சதவீதமாக இருக்கும்

புதுடெல்லி : அடுத்த நிதியாண்டில்(2013) இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5.4 சதவீதமாக இருக்கும் என்று மார்கன் ஸ்டான்லி நிறுவனம் கணித்துள்ளது. பொருளாதார ஆய்வு நிறுவமான மார்கன் ஸ்டான்லி, சமீபத்தில் வெளியிட்டிருந்த அறிக்கையில், 2013ம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5.1 சதவீதமாக இருக்கும் என்று தெரிவித்திருந்தது. இந்நிலையில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி சற்று உயர்ந்து 5.4 சதவீதமாக இருக்கும் என்று அந்நிறுவனம் நேற்று தெரிவித்துள்ளது.

அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''செப்டம்பர் மாதத்தில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளது. மேலும், விவசாயம் அல்லாத மற்ற துறைகளின் வளர்ச்சி நிலையாக இருந்தது. இதனால் பொருளாதார வளர்ச்சி விகிதம் சற்று உயர்ந்துள்ளது. அதேசமயம் 2014ம் ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.2 சதவீதமாக இருக்கும் என்று கூறப்பட்டதில், எந்த மாற்றமும் இல்லை'' என்று கூறப்பட்டுள்ளது.

03rd dec 2012 P.M

**இயற்கை விவசாயத்திற்கு நபார்டு வங்கி சார்பில் பயிற்சிகருத்தரங்கில் தகவல்**

திருத்துறைப்பூண்டி, : திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகே உள்ள ஆதிரெங்கம் இயற்கை வேளாண் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் பாரம்பரிய நெல் சாகுபடி குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. கிரியேட் விதை வங்கி ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் வரவேற்றார். நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன், பசுமை சிகரம் டிரஸ்ட் இயக்குநர் யோக நாதன், முன்னோடி இய ற்கை விவசாயி கரிகாலன், தமிழக இயற்கை உழவர் இயக்க தஞ்சை மாவட்ட தலைவர் முருகையன், உம்பளச்சேரி பாரம்பரிய கால் நடை வளர்ப்போர் சங்க தலைவர் ஜானகிராமன், சன் டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் தேவகி, ஒற்றுமை அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் சுப்பையன், கிரியேட் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் சதாசிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருவாரூர் மாவட்ட நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் ரவிசங்கர் தலை மை வகித்து பேசுகையில், இயற்கை விவசாயத்தில் மகசூல் குறையும் என்று சொல்லுவது தவறு. இதில் தற்போது அதிக லாபம் கிடைக்கிறது. இயற்கை விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து தேவையான பயிற்சியும் நபார்டு வங்கி அளித்து வருகிறது. வெளி மாநில, வெளி மாவட்டங்களுக்கு இயற்கை விவசாய தொழில் நுட்பங்களை தெரிந்து கொள்வதற்கு அழைத்துச் சென்று வரப்படுகிறது. இயற்கை விவாசயிகளுக்கு நபார்டு வங்கி பல்வேறு உதவி செய்து வரு கிறது. மாவட்டம் முழுவதும் கிராமங்கள் தோறும் உழவர் மன்றங்கள் அமைக்கப்பட்டு பயிற்சி கொடுத்து இந்த உறுப்பினர்கள் மற்ற விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கின்றனர் என்றார். இயற்கை விவசாயம் பற்றி ஓய்வு பெற்ற வேளாண் மை இணை இயக்குநர் பழனி, பாரம்பரிய நெல்லில் மருத்துவ குணம் பற்றி தேவூர் மாணிக்கவாசகம் ஆகியோர் பேசினர்.

**அமராவதி அணையின் நீர்மட்டம் சரிவு கல்லாபுரம் பாசனத்தில் நெல் சாகுபடி செய்த விவசாயிகள் கவலை**

உடுமலை, : அமராவதி அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது.இதனால் கல்லாபுரம், ராமகுளம் வாய்க்கால் பாசனத்தில் நெல் நடவு செய்த விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். உடுமலை அடுத்த அமராவதி அணை மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. பழைய ஆயக்கட்டு பகுதிக்கு ஆற்று வழியாகவும், புதிய ஆயக்கட்டு பகுதிக்கு பிரதான கால்வாய் வழியாகவும் ஆண்டுதோறும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதுதவிர, கல்லாபுரம், ராமகுளம் வாய்க்கால் பகுதியில் உள்ள 1350 ஏக்கர் நிலமும் பாசனம் பெறுகிறது. இங்கு 700 ஏக்கரில் நெல்லும், மீதி இடங்களில் கரும்பு, தென்னை, மக்காச்சோளமும் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். நெல் சாகுபடி 2 போகம் நடக்கிறது.

முதல் போகம் ஆகஸ்டில் நடவு செய்து நவம்பரிலும், இரண்டாம் போகம் டிசம்பரில் நடவு செய்து மார்ச்சிலும் அறுவடை செய்யப்படுகிறது. உலக வங்கி நிதி உதவியுடன் கால்வாய் சீரமைப்பு பணி நடந்ததால் இந்த ஆண்டு முதல்போக சாகுபடியை விவசாயிகள் கைவிட்டனர்.

இரண்டாம் போகம் பயிரிட நவம்பரில் இருந்தே ஆயத்தமாகி வந்தனர். டிசம்பர் துவங்கியதும், சுமார் 60 ஏக்கர் பகுதியில் விவசாயிகள் நெல் நடவு பணியையும் துவங்கிவிட்டனர். மற்ற விவசாயிகள் நடவு செய்ய தயக்கம் காட்டி வருகின்றனர். காரணம், 90 அடி உயரம் கொண்ட அமராவதி அணையில் தற்போது 36 அடிக்கு மட்டுமே தண்ணீர் உள்ளது.

நவம்பர் 19ம்தேதி விவசாயிகள் கேட்காமலே அணையில் இருந்து பிரதான கால்வாயில் 10 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஆற்று வழியாக ஏற்கனவே தண்ணீர் சென்று வருகிறது. இதனால் நீர்மட்டம் சரிந்து, நெல் பயிருக்கு போதுமான தண்ணீர் கிடைக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அணை நீர்மட்டம் 23 அடிக்கும் கீழ் சென்றால் கல்லாபுரம், ராமகுளம் வாய்க்காலில் தண்ணீர் விட முடியாது.

எனவே, விவசாயிகள் இரண்டாம் போகம் நெல் பயிரிட தயக்கம் காட்டி வருகின்றனர். 60 ஏக்கரில் நடவு செய்துள்ள விவசாயிகளும் தண்ணீர் கிடைக்குமா என்ற கவலையில் உள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

03.12.2012 P.M

04.12.2012 A.M

**வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மையம் : தமிழக கடலோர மாவட்டங்களில் இன்று அநேக இடங்களில் மழைபெய்யும்**

சென்னை,-

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை நீடிப்பதால் தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் இன்று (செவ்வாய்க்கிழமை) அநேக இடங்களில் மழைபெய்யும் என்றும் சில இடங்களில் கனமழைபெய்யும் என்றும் வானிலை இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலமாக இப்போது இருந்தாலும் கடந்த ஒரு மாதமாக மழை பெய்யவில்லை. மழைக்கு மாறாக டிசம்பர் மாதம் பெய்யக்கூடிய பனிப்பொழிவு முன்கூட்டியே தொடங்கியது. ஏற்கனவே ஆறுகள், குளங்கள் வறண்டு போய் கிடக்கின்ற நிலையில் இந்த வருடம் மழை பொய்த்துவிடுமோ என்று மக்கள் பயப்படுகிறார்கள்.இந்த நிலையில் வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவானதை கேட்டு விவசாயிகளும் மக்களும் மகிழ்ச்சி அடைந்தனர்.இன்றைய வானிலை குறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மண்டல இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நிருபர்களுக்கு கூறியதாவது:கடந்த வாரம் அந்தமான் அருகே கடல் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு நோக்கி நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடலில் வலு இழந்து குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலையாக நிலை கொண்டுள்ளது.

இன்று மழை பெய்யும்

இதன்காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரியில் கடலோர மாவட்டங்களில் இன்று (செவ்வாய்க்கிழமை) அநேக இடங்களில் மழைபெய்யும்.வடகடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைபெய்யும். உள்மாவட்டங்களிலும் சில இடங்களில் இன்று மழைபெய்யும். சென்னையை பொருத்தவரை இன்று அவ்வப்போது மழை பெய்யும். ஒரு சில பகுதிகளில் கனத்தமழைக்கு வாய்ப்பு உண்டு. குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலையாக உள்ளபோதிலும்

கடலோர மாவட்டங்களில் 6-ந்தேதி வரை மழை பெய்யும். அதன் பின்னர் படிப்படியாக மழை குறையும்.இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

மழை அளவு

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேர மழை அளவு வருமாறு:சென்னை அண்ணாபல்கலைக்கழகம் , சென்னை விமானநிலையம் தலா 5 செ.மீ., சென்னை டி.ஜி.பி. அலுவலகம், தாம்பரம் தலா 4 செ.மீ., ஸ்ரீபெரும்புதூர் , காஞ்சீபுரம் தலா 3 செ.மீ., எண்ணூர், வானூர், செங்கல்பட்டு, செய்யாறு தலா 2 செ.மீ., பூண்டி, பொன்னேரி, திருவள்ளூர், திண்டிவனம், திருக்கோவிலூர், செஞ்சி, சீர்காழி, நன்னிலம், கலவை தலா 1 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

மழை தூறல்

சென்னையிலும் புறநகர் பகுதிகளிலும் நேற்று முன்தினம் மழை பெய்தது. நேற்று வானம் மேகக்கூட்டத்துடன் காணப்பட்டது. பகலில் லேசாக மழை தூறல் போட்டது.

**தேவை அதிகரித்ததால் , அக்டோபர் மாதத்தில் இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதி 33.5 சதவீதம் உயர்வு**

புதுடெல்லி,-

அக்டோபர் மாதத்தில் கச்சா எண்ணெய் இறக்குமதி கணிசமாக அதிகரித்துள்ளது. உள்நாட்டில் தேவை அதிகரித்ததால் பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் எண்ணெய் இறக்குமதி செப்டம்பர் மாதத்தை காட்டிலும் அதிகமாக உள்ளது என இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

42.50 லட்சம் பீப்பாய்

நம் நாடு, அக்டோபர் மாதத்தில் ஒட்டுமொத்த அளவில் நாள் ஒன்றுக்கு 42.50 லட்சம் பீப்பாய் எண்ணெய் இறக்குமதி செய்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தை விட 33.5 சதவீதம் அதிகமாகும். ஜனவரி–அக்டோபர் மாத காலத்தில் மட்டும் இறக்குமதி 1.8 சதவீதம் உயர்ந்து நாள் ஒன்றுக்கு 32.40 லட்சம் பீப்பாய்களாக உயர்ந்துள்ளது.ஈரானிலிருந்து அதிக அளவில் எண்ணெய் வாங்குவதை தவிர்க்கும் வகையில், ஜனவரி – அக்டோபர் மாத காலத்தில் லத்தீன் அமெரிக்காவிலிருந்து 71 சதவீதம் அதிகமாக எண்ணெய் வாங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஜனவரி–அக்டோபர் மாத காலத்தில் மொத்த எண்ணெய் இறக்குமதியில்

லத்தீன் அமெரிக்காவின் பங்கு 16 சதவீதமாக உள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 10 சதவீத அளவிற்கே இருந்தது.

அக்டோபர் மாதத்தில், ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதி, செப்டம்பரை காட்டிலும் 14 சதவீதம் உயர்ந்துள்ளது. அதே சமயம் ஏப்ரல்–அக்டோபர் மாத காலத்தில் இறக்குமதி 12 சதவீதம் குறைந்துள்ளது. ஈரானிலிருந்து எண்ணெய் வாங்குவதில் சீனா முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. நிதி ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் ஈரானிலிருந்து நம் நாடு நாள் ஒன்றுக்கு 2.77 லட்சம் பீப்பாய் எண்ணெய் இறக்குமதி செய்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் நாள் ஒன்றுக்கு 3.16 லட்சம் பீப்பாய்களாக இருந்தது.ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் உலகின் மிகப் பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலையைக் கொண்டுள்ளது. இந்நிறுவனத்தின் எண்ணெய் இறக்குமதி, அக்டோபர் மாதத்தில் 13 சதவீதம் உயர்ந்துள்ளது. மேற்கு குஜராத் மாநிலத்தில் அதிநவீன சுத்திகரிப்பு ஆலைகளைக் கொண்டுள்ள இந்நிறுவனம் நாள் ஒன்றுக்கு 12 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெயை சுத்திகரிக்கும் திறன் கொண்டவையாகும்.

<u>எஸ்ஸார் ஆயில்</u>

மற்றொரு தனியார் நிறுவனமான எஸ்ஸார் ஆயில், அக்டோபர் மாதத்தில் ஈரான் நாட்டிலிருந்து முந்தைய மாதத்தை விட 30 சதவீதம் அதிகமாக எண்ணெய் இறக்குமதி செய்துள்ளது. இவ்வாண்டு ஜனவரி–அக்டோபர் மாத காலத்தில், இந்நிறுவனத்தின் ஒட்டுமொத்த கச்சா எண்ணெய் இறக்குமதி 46 சதவீதம் உயர்ந்து நாள் ஒன்றுக்கு 30,000 பீப்பாய்களாக அதிகரித்துள்ளது. இதில் ஈரான் நாட்டின் பங்கு 42 சதவீதமாக உள்ளது.